

தி.மு.க. தலைவர் முக.ஸ்டாலின் அறிவுறுத்தலின்படி தி.மு.க. நிறுவன தலைவர் பேரறிஞர் அண்ணாவின் 118வது பிறந்தநாளையொட்டி புதிய மாநகராட்சி அருகிலுள்ள அண்ணா சிலைக்கு வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் முன்னாள் அமைச்சருமான கீதாஜீவன் மாலை அணிவித்து மரியாதை செய்தார். நிகழ்ச்சியில், மேயர் ஜெகன் பெரியசாமி, மாநகர தி.மு.க. செயலாளர் ஆனந்தசேகரன், துணைமேயர் ஜெனிட்டா, மாவட்ட அவைத்தலைவர் செல்வராஜ், துணைச்செயலாளர் ராஜ்மோகன் செல்வின், பொருளாளர் ரவீந்திரன், மாவட்ட அணி நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், தொழிற்சங்க நிர்வாகிகள், வட்டச்செயலாளர்கள், கவுன்சிலர்கள், பகுதி அணி அமைப்பாளர்கள், பிரபாகர், மணி, சுமன், திலகராஜ், ரேவதி, முன்னாள் கவுன்சிலர்கள் இசக்கிமுத்து, சாந்தா, உள்பட பலர் கலந்து கொண்டனர்.



நெல்லை கிழக்கு மாவட்டம் இராதாபுரம் மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 118 வது பிறந்த நாளை முன்னிட்டு சமூகரெங்கபுரத்தில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருஉருவசிலைக்கு சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு தலைமையில் இராதாபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் மி.ஜோசப்பெல்சி முன்னிலையில் மாலை அணிவித்து மலர் தூவி புகழஞ்சலி செலுத்தப் பட்டது.நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள் ஐ.ராமையா,செங்குட்டுவன்,செழியன், வாழவந்த கணபதிபாலன்,சமூகை முரளி,அந்தோணி அருள் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.நிறைவில் அனைவருக்கும் இனிப்பு வழங்கப் பட்டது.



திண்டுக்கல் மாவட்டம் கள்ளிமந்தையத்தில் பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு முன்னாள் அமைச்சர் அர.சக்கரபாணி எம்.எல்.ஏ.மலர் தூவி மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார் . விழாவில் மாவட்ட துணைச் செயலாளர் ராஜாமணி, ஒன்றிய செயலாளர் பி.சி.தங்கம், கள்ளிமந்தையம் கிளை செயலாளர் கோதண்டராமன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் கணேசன், ராஜேஷ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆனந்தராஜ், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் தண்டபாணி, முன்னாள் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் ராஜேஷ் உள்ளிட்ட நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் வாடிப்பட்டியில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 118வது பிறந்த தினத்தை முன்னிட்டு மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் பி.மூர்த்தி ஆலோசனையின் படி அண்ணாவின் திருவுருவ சிலைக்கு மாவட்ட துணை செயலாளர் முன்னாள் எம்.எல்.ஏ. ஆ.வெங்கடேசன் தலைமையில், மு.பால்பாண்டியன், சிறைச்செல்வன், பால ராஜேந்திரன், பசும்பொன்மாறன், மாநில அணி நிர்வாகிகள் வழக்கறிஞர் கலாநிதி, நேரு பாண்டியன், கணேசன், கலை கார்த்திகேயன், தமிழரசன் ஆகியோர் முன்னிலையில் ஊர்வலமாக வந்து மாலை அணிவித்து மரியாதை செலுத்தி இனிப்புகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் மருது பாண்டியன், பெ.சசிகுமார், வீரராகவன், வக்கீல் கார்த்திக், ரேணுகா ஈஸ்வரி கோவிந்தராஜ், ஒத்தக்கடை சரவணன், வழக்கறிஞர் கோகுல் கழக நிர்வாகிகள் கிருஷ்ணவேணி பால்பாண்டியன், வெற்றிச்செல்வன், சாமிநாதன், பெரியசாமி, வீரக்குமார், செந்தில்குமரன், வினோத்குமார், ஆர்.பி. சக்திவேல், முருகன் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள் கழகத்தினர் பங்கேற்றனர்.

# மயிலாடுதுறையில் மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

மயிலாடுதுறை, செப் 16–

மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மயிலாடுதுறை விஜய் திருமண மஹாலில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட கழக அவைத் தலைவர் கே.ஜி. சினிவாசன் தலைமை தாங்கினார். தலைமைக் கழக பிரதி நிதிகள் முன்னாள் அமைச்சர் கோவி.செழியன் எம்.எல்.ஏ., மாநில் பொறியாளர் அணி தலைவர் துரை கி.சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் கூட்டத்தின் நோக்கம் குறித்தும், கூட்டத்தில் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானம் குறித்து மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் பேசினார். கூட்டத்தில் கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், சட்டமன்ற முன்னாள் உறுப்பினரும், தலைமைச் செயற்குழு உறுப்பினருமான எம்.பன்னீர்செல்வம், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் இரா. செந்தில்செல்வன், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம், மாநில விவசாய தொழிலாளர் அணி இணை செயலாளர் ஜெக. வீரபாண்டியன், தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர் பி.எம்.ஸ்ரீதர் மாநில இலக்கிய அணி துணை செயலாளர் வை.சௌமியன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் கி.சத்தியசிலன், டாக்டர் எம். பன்னீர்செல்வம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இராம்.இளங்கோவன், ஜி.என்.ரவி, முத்துமகேந்திரன், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, கண்ணகி பன்னீர், பொருளாளர் மகா.அலெக்சான்டர் ஒன்றிய கழக செயலாளர்கள் மங்கை எம்.சங்கர், செல்ல. சேதுகுமார், மூவலூர் எம். மூர்த்தி, என்.இளையபெருமாள், மலர்விழி திருமாவளவன், ஏ.ஜி. ஜெ.பிரபாகர், பி.எம்.அன்பழகன், எம்.அப்துல்மாலிக், அமிர்த.விஜயகுமார், ஏ.ஆர். ராஜா, வைத்தியநாதன், ஞான. இமையநாதன், பி.முருகமணி, பேரூர் கழக செயலாளர்கள் எம். சம்சுதீன், எம்.அன்புச்செழியன், எஸ்.கே.முத்துராஜா, அண்ணாதுரை. பொதுக்குழு உறுப்பினர்கள் நத்தம் ஏ. வின்சென்ட், பி. சிவதாஸ், ஹர்ஷத், வைத்தீஸ்வரன்கோயில் எஸ்.சுவாமிநாதன், எஸ். சங்கரநாராயணன், ஜெ.கபிலன், பி.கென்னடி அ.காந்தி, சுபாநெடுஞ்செழியன், வழக்கறிஞர் அணி இராம. சேயோன், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் எம்.கே. மருது, இரா.முருகன், க.அறிவுச்செல்வன், வி.எஸ். என்.செந்தில், காளி.தேசப்பன், இரா.முருகப்பா, ஆர்.சாந்தி, வி.எஸ்.பிரபாகரன், இரா. மனோகரன், தீபாசத்தியேந்திரன், ஆர்.செல்வராஜ், மாவைத்தியநாதன், கே.விக்னேஷ், டி.ராஜ்குமார், பெரு.வீரமணி, ஆர். எஸ்.ஸ்ரீதர், வெடி எஸ்.பாலமுருகன், எஸ்.எம்.சம்சுதீன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் கோசி.மதி. திருமாவளவன், வினோத் பாண்டியன், சௌ.சர்வோதயன், ஜெ. ஜுபைர் அகமது, சக்தி விஜய், ஆனந்தன், குத்தாலம் பேரூராட்சி மன்ற தலைவர் சங்கீதா மாரியப்பன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர் முடிவில் மயிலாடுதுறை நகரக் கழக செயலாளர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ் நன்றி கூறினார்.

## ஜோசப்பெல்சி முன்னிலை!

# இராதாபுரத்தில் பேரறிஞர் அண்ணா 118வது பிறந்தநாள் விழா!

## முன்னாள் பேரவை தலைவர் மு.அப்பாவு தலைமையில் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

நெல்லை, செப்.16-

நெல்லை கிழக்கு மாவட்டம் இராதாபுரம் மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்கள் 118 வது பிறந்தநாள் விழா முன்னிட்டு இராதாபுரம் மேற்கு ஒன்றியம் சமூக ரெங்கபுரத்தில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் முழு திருவுருவச்சிலைக்கு சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு தலைமையில் இராதாபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் மி.ஜோசப்பெல்சி முன்னிலையில் மாலை அணிவித்து மலர் தூவி புகழஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து அனைவருக்கும் இனிப்பு வழங்கப் பட்டது.

நிகழ்வில் இராதாபுரம் மேற்கு ஒன்றிய அவைத் தலைவர் ஐ.ராமையா, ஒன்றிய பொருளாளர் ஆ.செங்குட்டுவன்,ஒன்றிய துணைச் செயலாளர் சு.செழியன், வாழவந்த கணபதி பாலன், கென்னடி, மாவட்ட பிரதிநிதிகள் சமூகை சு.முரளி, வேலப்பன், பணகுடி மு.க.மாணிக்கம், அன்பரசு,ஊராட்சி மன்றத் தலைவர்கள் சமூகரெங்கபுரம் அ.அந்தோணி அருள், சௌந்திரபாண்டியபுரம் சி.முருகேசன், சமூகரெங்கபுரம் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் பேச்சியப்பன், பணகுடி ராமலிங்கசுவாமி கோவில் அறங்காவலர் குழு முன்னாள் தலைவர் அசோக்குமார், மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் ரா.சுப்பையா, மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி துணை அமைப்பாளர் இ.வேணுகோபால், இராதாபுரம் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் கிழக்கு எஸ்தாக்கெனிஸ்டன், மேற்கு சு.மகேஷ்,ஒன்றிய அணி அமைப்பாளர்கள் வர்த்தக அணி தக்காளி குமார்,கலை இலக்கிய பகுத்தறிவு பாசறை அணி கருணைராஜ்,மாணவரணி செல்வகணேஷ், இராதாபுரம் விவசாய சங்க தலைவர் பாப்பான்குளம் ச.ஐயப்பன், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு முன்னாள் துணை அமைப்பாளர்சி. மூர்த்தி, கிளைச் செயலாளர்கள் ஈனங்குடியிருப்பு பால்ராஜ்,முத்து நாடார்குடியிருப்பு அம்புரோஸ், வடிவம்பட்டி மிலிட்டரி முத்து, ஈனங்குடியிருப்பு தினேஷ்,பிரகாசபுரம் அந்தோணிராஜ்,தர்மராஜ்,நாகராஜ்,தப்பு ஐயப்பன், கோட்டை கருங்குளம் அண்ணாதுரை உட்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

# அனீபா ஏற்பாட்டில்

# முத்தமிழறிஞர் கலைஞரின் 103வது பிறந்தநாள் நிறைவு விழா!

தஞ்சாவூர், செப்.16 -

தஞ்சை வடக்கு மாவட்டம் பாபநாசம் பேருந்து நிறுத்தத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு தொடர்ந்து 103 நாட்கள் பொது மக்களுக்கு உணவு மற்றும் நலத் திட்டங்கள் வழங்கும் நிகழ்வின் நிறைவு நாள் விழா நடைபெற்றது.

தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. சிறுபான்மையினர் அணி சார்பாக மாவட்டக் கழக பொறுப்பாளர் சாக்கோட்டை க. அன்பழகன் அவர்களின் வழிகாட்டுதலோடு சிறுபான்மையினர் அணி மாநில செயலாளர் மரு.சுபர்கான் ஆலோசனைக்கிணங்க மாவட்ட அமைப்பாளர் பாவை அனீபா ஏற்பாட்டில் 103 நாட்கள் தொடர் நிகழ்வாக மக்களுக்கான நலத் திட்ட உதவிகள், மதிய உணவு மற்றும் தினந் தோறும் குளிர் பானங்கள் வழங்கி வந்தனர் 13.09.2026 அன்று 103வது நாள் நிறைவு நாள் நிகழ்ச்சியில் பொது மக்களுக்கு கருப்பு சிகப்பு வண்ணத்தில் 103 குடைகள், 103 சிக்கன் பிரியாணி, 103 வெஜ் பிரியாணி, 103 மரக்கன்றுகள், 103 கடலை மிட்டாய்கள், 103 பக்கெட்கள், மற்றும் இனிப்புகள் உள்ளிட்டவைகள் வழங்கினார்கள். விழாவில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.ரெங்கசாமி, பாபநாசம் வடக்கு ஒன்றியச்செயலாளர் கோ.தாமரைச்செல்வன், தெற்கு ஒன்றிய செயலாளர் என். நாசர், மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.துரைமுருகன், பேரூர் செயலாளர் ச.கபிலன், துணை செயலாளர் உதயா, வழக்கறிஞர் இளையராஜா, சரண், அறிவழகன், மற்றும் மாவட்ட ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள் கழக உடன்பிறப்புகள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர் விழா ஏற்பாடுகளை பாவை அனீபா மற்றும் பி.கணேஷ், எஸ்.ஜெ. சுரேஷ், வீரமணி, எம்.சிந்திக், தீபன், அக்கீம் அலி, அருணாஷ், சரத் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

## குறள்நெறியாளர் கு. பரசுராமன் நினைவு நாள்!

# பெரியார் படிப்பகத்தின் சார்பில் பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா!

## நெல்லுப்பட்டு அ. இராமலிங்கம் தலைமையில் நடைபெற்றது!




தஞ்சை,செப்.16-

தஞ்சை மாவட்டத்தின் குரள் நெறியாளர் கு.பரசுராமன் நினைவு பெரியார் படைப்பகத்தின் சார்பில் பேரறிஞர் அண்ணாவின் 118வது பிறந்த தினம் படிப்பக செயலாளர் நெல்லுப்பட்டு அ.இராமலிங்கம் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் மாநில செய்தி தொடர்பாளர் அ.ரகமதுல்லா, மொழிப்போர் தியாகி வீ.வெங்கட்ராவ் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

இந்நிகழ்வில் திராவிடர் கழக மாநில ஒருங்கிணைப்பாளர் உரத்தநாடு இரா. குணசேகரன் பேரறிஞர் அண்ணாவின் சுயமரியாதை திருமணம், தமிழ்நாடு பெயர் மாற்றம் உள்ளிட்ட பேரறிஞர் அண்ணா தமிழ்நாட்டிற்கு செயல்படுத்திய திட்டங்கள் குறித்து பேசினார்.

இந்நிகழ்வில் கா.முத்துக் கிருஷ்ணன், திராவிடர் கழக மாநில மாணவரணி செயலாளர் இரா.செந்தூர பாண்டியன், போரா.கு.குட்டிமணி, மருத்துவர் சதீஷ் குமார், பொறியாளர் ப.பாலகிருஷ்ணன், அ.பசுபதி, வெள்ளூர் முருகேசன், மா. மா.திராவிட செல்வன், ஓய்வு பெற்ற வட்டார வளர்ச்சி அலுவலர் ராஜ்குமார், படிப்பகைக் காப்பாளர் ந.மாரிமுத்து உள்ளிட்டோ கலந்து கொண்டனர்.



அறிவுலக ஆசான், பேரறிஞர் அண்ணா அவர்களின் 118வது பிறந்தநாளை முன்னிட்டு நீலகிரி மாவட்ட தி.மு.க. சார்பில், மாவட்ட கழக அலுவலக முகப்பில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாவட்ட கழக அவை தலைவர் போஜன் தலைமையில் நிர்வாகிகள் மலர்தூவி மரியாதை செலுத்தினர், உடன் துணை செயலாளர் ரவிகுமார், மாவட்ட பொருளாளர் நாசர் அலி, தலைமை செயற்குழு உறுப்பினர் தம்பி இஸ்மாயில், நகர செயலாளர்கள் ஜார்ஜ், ரமேஷ், ஒன்றிய செயலாளர் ஜெகதீசன் மற்றும் பலர் உள்ளனர்.



விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் தலைமையில் விழுப்புரம், கலைஞர் அறிவாலயத்தில், பேரறிஞர் அண்ணா அவர்களின் 118 வது பிறந்தநாளில் அவருடைய திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, பொதுமக்களுக்கு காலை உணவு மற்றும் இனிப்புகள் வழங்கினார். உடன் வானூர் சட்டமன்ற உறுப்பினர் தி.கௌதம், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் இரா.கண்ணப்பன், விழுப்புரம் கிழக்கு நகர கழக பொறுப்பாளர் எஸ்.வெற்றிவேல், கோட்டக்குப்பம் நகர செயலாளர் எஸ்.எஸ்.ஜெயமூர்த்தி, ஒன்றிய கழக செயலாளர்கள் பா.தெய்வசிகாமணி, தே.முருகவேல், ராஜா, கு.செல்வமணி, வே.கணேசன், மைதிலி ராஜேந்திரன், ராஜி, சீனு.செல்வரங்கம், திருவக்கரை கோ.பாஸ்கரன், ச.புஷ்பராஜ், தலைமை கழக வழக்கறிஞர் சுவை சுரேஷ், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் வாசன், என்.பஞ்சநாதன், சம்பத், கோலியனூர் ஒன்றிய குழு பெருந்தலைவர் ஏ.சச்சிதானந்தம் மற்றும் மாவட்ட, நகர, ஒன்றிய பொறுப்புக்குழு உறுப்பினர்கள், மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூராட்சி சார்பு அணி நிர்வாகிகள், வெல்லும் தமிழ்ப்பெண்கள் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்